தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1974 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

திருப்பூர் அரசினர் மகளிர் கல்லூரி விடுதி

* 571 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் L.R.G. நாயுடு அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

M. Com., B. Com., courses

* 572 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of colleges in the State where M.Com., and B Com., courses are conducted?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதுநிலை வணிகவியல் பயிற்சி அளிக்கும் கல்லூரிகள்—12

இளநிலை வணிகவியல் பயிற்சி அளிக்கும் கல்லூரிகள்—66